**உயர் கல்வி விரிவாக்கம் மற்றும் மேம்பாட்டு செயற்பாட்டுத் திட்டத்தைத் துரிதப்படுத்தல் செயற்திட்டம் - 2019**

---

உயர் கல்வி விரிவாக்கம் மற்றும் மேம்பாட்டு செயற்பாட்டுத் திட்டத்தைத் துரிதப்படுத்தல் செயற்திட்டத்தின் 2019 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக இலங்கை சனநாயக சோசலிச குடியரசிற்கும் சர்வதேச அபிவிருத்திச் சங்கத்திற்கும் மீள்நிர்மாண மற்றும் அபிவிருத்திக்கான சர்வதேச வங்கிக்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட 2017 யூலை 17 ஆம் திகதிய 6026 எல்கே ஆம் இலக்க நிதி உடன்படிக்கையுடனும் 8743 எல்கே ஆம் இலக்க கடன் உடன்படிக்கையின் 4.09(பீ) உறுப்புரையுடனும் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட வேண்டியதாகக் கருதப்படும் எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இவ் அறிக்கையில் உள்ளன.

**1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், நோக்கங்கள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி**

செயற்திட்டத்தின் கடன் மற்றும் நிதி உடன்படிக்கைகளின் பிரகாரம், முன்னைய உயர் கல்வி மற்றும நெடுஞ்சாலைகள் அமைச்சும் தற்போதைய உயர் கல்வி, தொழில்நுட்பவியல் மற்றும் கண்டுபிடிப்புகள் அமைச்சு நிறைவேற்று முகவராவதுடன் 15 பல்கலைக்கழகங்களும் இலங்கை உயர் தொழில்நுட்பவியல் கல்வி நிறுவகமுமே அமுலாக்கல் முகவராக உள்ளன. (i) அரச பல்கலைக்கழகங்கள், இலங்கை உயர் தொழில்நுட்பவியல் கல்வி நிறுவகம் மற்றும் அரச சார்பற்ற உயர் கல்வி நிறுவகங்களில் முன்னுரிமைத் துறைகளான விஞ்ஞானம், தொழில்நுட்பம், பொறியியல் மற்றும் மருத்துவம் சேர்க்கையை அதிகரித்தல் (ii) பட்டப் படிப்புத் திட்டத் தரத்தை மேம்படுத்தல் மற்றும் (iii) உயர் கல்வித் துறையில் ஆராய்ச்சி மற்றும் கண்டுபிடிப்புகளை மேம்படுத்தல் செயற்திட்டத்தின் குறிக்கோளாகும். கடன் மற்றும் நிதி உடன்படிக்கைகளின் கீழ் செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ரூபா 18,136 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 100 மில்லியனானதுடன் செயற்திட்டத்தின் மொத்தக் கிரயம் சர்வதேச அபிவிருத்திச் சங்கத்தினால் நிதியீட்டப்படுவதற்கு உடன்பட்டிருந்தது. செயற்திட்டம் அதன் நடவடிக்கைகளை 2018 மார்ச் 01 ஆம் திகதி ஆரம்பித்திருந்ததுடன் 2023 யூன் 03 ஆம் திகதியளவில் பூர்த்தியாக்கப்பட வேண்டுமென திட்டமிடப்பட்டிருந்தது.

**1.3 அபிப்பிராயம்**

செயற்திட்டத்தின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் நிதிச் செயலாற்றல் மற்றும் அதனது முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் அதனுடன் இனைந்த நிதிக்கூற்றுக்கள் என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுக் கோட்பாடுகளிற்கு இணங்க உண்மையானதும் நேர்மையானதுமான நிலைமை ஒன்றை தருகின்றது என்பது எனது அபிப்பிராயம் ஆகும்.

**1.4 அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.5 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

இந்நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுக் கோட்பாடுகளிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து

விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

செயற்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புகள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு நலிவுகள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக உரிய உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 2. நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.1 தீர்க்கப்படாத மீதிகள்

| 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | | தாமதம் | தாக்கம் | தாக்கங்களிற்கான காரணங்கள் |
|---|---|---|---|---|
| எதிர்பார்க்கப்பட்ட பௌதீகச் செயற்பாடு அலகுகளில் | எய்தப்பட்ட செயற்பாடு | | | |

| இல | விபரம் | தொகை ரூபா மில்லியன் | தீர்க்கப்படாத காலம் | தாக்கம் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|---|---|---|
| **3.1.1** | **Equipment** | | | | | |
| அ 1 | களனிப் பல்கலைக்கழகம் | 7.0 | 2 மாதங்களுக்கு மேலாக | ஏனைய வேலைகளுக்காக நிதியைப் பயன்படுத்தக் கூடும் குறித்த காலப்பகுதியில் பட்டதாரி மாணவர்களுக்கு எதிர்பார்க்கப்பட்ட நலன்கள் கிட்டப்படமாட்டாது | எதிர்பார்க்ககப்பட்ட கொள்வனவு மேற்கொள்ளப்பட்டுள்ளது. முற்பணத்திலிருந்தான சேமிப்புகள் மீளளிக்கப்பட்டுள்ளன. | நிதிப் பிரமாணம் பின்பற்றப்பட வேண்டும். வேலைகள் துரிதப்படுத்தப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியதுடன் கண்காணிப்பு நடைமுறைகள் பல்கலைக்கழக வேலைகளிற்காகப் பின்பற்றப்பட வேண்டும். சரியான நேரத்தில் சரியான கிரயத்தில் பல்கலைக்கழகத்தில் வேலையை மேற்கொண்டு விளைவற்ற / நிதி முறைகேட்டைத் தவிர்ப்பதற்காக வேலைகளிற்கான நிதி விடுவிக்கப்பட முன்னர் துல்லியமான தொகையை மதிப்பிட |
| ஆ 2 | ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம் | 5.5 | 6 மாதங்களுக்கு மேலாக | | | |
| இ 3 | திறந்த பல்கலைக்கழகம் | 5 | 11 மாதங்களுக்கு மேலாக | | | |
| ஈ 4 | தென்கிழக்குப் பல்கலைக்கழகம் | 5.8 | 4 ½ மாதங்களுக்கு மேலாக | | | |
| உ 5 | உருகுணு பல்கலைக்கழகம் | 22.2 | 4 மாதங்களுக்கு மேலாக | | | |
| ஊ 6 | மொறட்டுவ பல்கலைக்கழகம் | 28.3 | 3½ மாதங்களுக்கு மேலாக | | | |
| எ 7 | யாழ்ப்பாண பல்கலைக்கழகம் | 14.6 | 2 மாதங்களுக்கு மேலாக | | | |
| ஏ 8 | வயம்ப பல்கலைக்கழகம் | 15.1 | 6 மாதங்களுக்கு மேலாக | | | |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| ஐ 9 | சபரகமுவ பல்லைக்கழகம் | 9.3 | 7½ மாதங்களுக்கு மேலாக | | | வேண்டும். |

**3.1.2 ஆராய்ச்சி மற்றும் கண்டுபிடிப்பு வர்த்தகமயமாக்கல்**

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| ஒ 10 | ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம் | 24.5 | 5 ½ மாதங்களுக்கு மேலாக | ஏனைய வேலைகளுக்காக நிதியைப் பயன்படுத்தக் கூடும். இது செயற்திட்டத்தின் எதிர்பார்க்கப்பட்ட விளைவுகளையும் பலன்களையும் தாக்கும். | திட்டமிடப்பட்ட சகல நடவடிக்கைகளும் தற்போது நடைமுறையில் உள்ளன. | நிதிப் பிரமாணம் பின்பற்றப்பட வேண்டும். வேலைகள் துரிதப்படுத்தப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியதுடன் கண்காணிப்பு நடைமுறைகள் பல்கலைக்கழக வேலைகளிற்காகப் பின்பற்றப்பட வேண்டும். சரியான நேரத்தில் சரியான கிரயத்தில் பல்கலைக்கழகத்தில் வேலையை மேற்கொண்டு விளைவற்ற / நிதி முறைகேட்டைத் தவிர்ப்பதற்காக வேலைகளிற்கான நிதி விடுவிக்கப்பட முன்னர் துல்லியமான தொகையை மதிப்பிட வேண்டும். |
| ஓ11 | திறந்த பல்கலைக்கழகம் | 19.8 | 5 ½ மாதங்களுக்கு மேலாக | | | |
| ஔ 12 | பேராதனைப் பல்கலைக்கழகம் | 20.6 | 8 ½ மாதங்களுக்கு மேலாக | | | |
| க 13 | மொறட்டுவ பல்கலைக்கழகம் | 5.0 | 6 ½ மாதங்களுக்கு மேலாக | | | |
| கா 14 | சபரகமுவ பல்லைக்கழகம் | 2.9 | 7½ மாதங்களுக்கு மேலாக | | | |

**3.1.3 பல்கலைக்கழக வணிக இணைப்பின் விருத்தி (யூபீஎல் செல் )**

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| அ | களனிப் பல்கலைக் கழகம் | 1 | 2 ½ மாதங்களுக்கு மேலாக | ஏனைய வேலைகளுக்காக நிதியைப் பயன்படுத்தக் கூடும். இது செயற்திட்டத்தின் எதிர்பார்க்கப்பட்ட விளைவுகளையும் | ஆரம்பத்தில் செயற்திட்டத்தின் முன்னேற்றம் மெதுவாகக் காணப்பட்டது. ஏவ்வாறெனினும், முழு நேர முகாமையாளர் ஒருவர் தற்போது | நிதிப் பிரமாணம் பின்பற்றப்பட வேண்டும். வேலைகள் துரிதப்படுத்தப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியதுடன் |
| ஆ | ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக் கழகம் | 2.3 | 6 ½ மாதங்களுக்கு மேலாக | | | |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| இ | திறந்த பல்கலைக் கழகம் | 1.5 | 6 ½ மாதங்களுக்கு மேலாக | பலன்களையும் தாக்கும். | நியமிக்கப்பட்டு திருப்தியான நிலையில் செல் செயற்படுகின்றது. | கண்காணிப்பு நடைமுறைகள் பல்கலைக்கழக வேலைகளிற்காகப் பின்பற்றப்பட வேண்டும். சரியான நேரத்தில் சரியான கிரயத்தில் பல்கலைக்கழகத்தில் வேலையை மேற்கொண்டு விளைவற்ற / நிதி முறைகேட்டைத் தவிர்ப்பதற்காக வேலைகளிற்கான நிதி விடுவிக்கப்பட முன்னர் துல்லியமான தொகையை மதிப்பிட வேண்டும். |
| ஈ | தென்கிழக்குப் பல்கலைக் கழகம் | 1.1 | 12 மாதங்களுக்கு மேலாக | | | |
| உ | உருகுணு பல்கலைக் கழகம் | 3.4 | 6 ½ மாதங்களுக்கு மேலாக | | | |
| ஊ | ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக் கழகம் | 1.3 | 3 ½ மாதங்களுக்கு மேலாக | | | |
| எ | சபரகமுவ பல்லைக்கழகம் | 1.1 | 2 மாதங்களுக்கு மேலாக | | | |

**புத்தாக்கம் வர்த்தகமயமாக்கல் ஊக்குவிப்பு (ஐசீஈ)**

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| அ | ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக் கழகம் | 10.5 | 12 மாதங்களுக்கு மேலாக | ஏனைய வேலைகளுக்காக நிதியைப் பயன்படுத்தக் கூடும். இது செயற்திட்டத்தின் எதிர்பார்க்கப்பட்ட விளைவுகளையும் பலன்களையும் தாக்கும். | 2018 இல் செயற்திட்டத்தின் ஆரம்பத்தில் கொள்வனவுகள் மற்றும் ஏனைய நடவடிக்கைகளைத் துரிதப்படுத்துவதற்காக நிதி விடுவிக்கப்பட்டிருந்தது. எவ்வாறெனினும், செயற்திட்டத்தின் முன்னேற்றம் ஆரம்பத்தில் மெதுவாகக் காணப்பட்டது. திட்டமிடப்பட்ட சகல நடவடிக்கைகளும் திருப்தியாக நடைமுறையில் உள்ளன. | நிதிப் பிரமாணம் பின்பற்றப்பட வேண்டும். வேலைகள் துரிதப்படுத்தப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியதுடன் கண்காணிப்பு நடைமுறைகள் பல்கலைக்கழக வேலைகளிற்காகப் பின்பற்றப்பட வேண்டும். சரியான நேரத்தில் சரியான கிரயத்தில் பல்கலைக்கழகத்தில் வேலையை மேற்கொண்டு விளைவற்ற / நிதி முறைகேட்டைத் தவிர்ப்பதற்காக வேலைகளிற்கான |
| ஆ | உருகுணு பல்கலைக் கழகம் | 6.4 | 7 ½ மாதங்களுக்கு மேலாக | | | |
| இ | பேராதனைப் பல்கலைக் கழகம் | 9.5 | 6 ½ மாதங்களுக்கு மேலாக | | | |
| ஈ | வயம்ப பல்கலைக் கழகம் | 5.0 | 6 ½ மாதங்களுக்கு மேலாக | | | |
| உ | கொழும்பு பல்கலைக் கழகம் | 21.3 | 7 ½ மாதங்களுக்கு மேலாக | | | |

நிதி விடுவிக்கப்பட முன்னர் துல்லியமான தொகையை மதிப்பிட வேண்டும்.

## 3.3 சட்டங்கள் விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

| இல. | சட்டங்கள் விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | தாக்கம் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|---|---|
| | ---------------- | -------------- | ---------- | ---------------------- | ------------- |
| (அ) | 2002 நவம்பர் 28 இன் ஐஏஐ/2002/02 ஆம் இலக்க திறைசேரி சுற்றறிக்கை | கணனிகள், பொருத்திகள் மற்றும் மென்பொருள் தொடர்பாக ஓர் நிலையான சொத்துப் பதிவேடு யூசீஎஸ்சீ இனால் பேணப்பட்டிருக்கவில்லை. | • சொத்துக்களின் உள்ளபடிநிலை குறித்து உறுதிப்படுத்த முடியாதிருந்தது.<br>• ஏனைய நோக்கங்களுக்காகப் பயன்படுத்தப்படக் கூடும்.<br>• முறைகேடான பயன்பாடு மற்றும் சேதங்கள் நிகழலாம். | சகல ஓடீஎஸ் உத்தியோகத்தர்களும் நிலையான சொத்துப் பதிவேடு ஒன்றைப் பேணும் படி அறிவுறுத்தப்பட்டுள்ளதுடன் ஓர் வடிவமும் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. யூசீஎஸ்சீ இனால் தாம் அத்தகைய நிலையான சொத்துப் பதிவேட்டைப் பேணுவதாக எமக்கு அறிவிக்கப்பட்டது. | சுற்றறிக்கையின் படியான அறிவுறுத்தல்கள் இணங்கப்பட வேண்டும். |
| | | கணனிகள், பொருத்திகள் மற்றும் மென்பொருள் தொடர்பாக ஓர் நிலையான சொத்துப் பதிவேடு களனிப் பல்கலைக்கழக விஞ்ஞான பீடத்தினால் பேணப்பட்டிருக்கவில்லை. | • சொத்துக்களின் உள்ளபடிநிலை குறித்து உறுதிப்படுத்த முடியாதிருந்தது.<br>• ஏனைய நோக்கங்களுக்காகப் பயன்படுத்தப்படக் கூடும்.<br>• முறைகேடான பயன்பாடு மற்றும் சேதங்கள் நிகழலாம். . | ஓர் நிலையான சொத்துப் பதிவேடு ஓடீஎஸ் இனால் ஏஎச்ஈஏடீ நிதியத்தின் கீழ் கொள்வனவு செய்யப்பட்ட சகல சொத்துக்களுக்காகவும் பேணப்பட்டுள்ளது. பீடங்களும் திணைக்களங்களும் பொருட்பதிவேட்டைப் பேணுகின்றன. | சுற்றறிக்கையின் படியான அறிவுறுத்தல்கள் இணங்கப்பட வேண்டும். |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| (ஆ) | 2009 செப்தெம்பர் 01 ஆம் திகதிய முகாமைத்துவக் கணக்காய்வுத் திணைக்களச் சுற்றறிக்கை இல. டீஎம்ஏ/2009/2 | களனிப் பல்கலைக்கழக விஞ்ஞான பீடத்தினால் சொத்துப் பதிவுகள் இச் சுற்றறிக்கையின் படி பேணப்பட்டிருக்கவில்லை. | • சொத்துக்களின் உள்ளபடிநிலை குறித்து உறுதிப்படுத்த முடியாதிருந்தது.<br>• ஏனைய நோக்கங்களுக்காகப் பயன்படுத்தப்படக் கூடும்.<br>• முறைகேடான பயன்பாடு மற்றும் சேதங்கள் நிகழலாம். | ஓர் நிலையான சொத்துப் பதிவேடும், பொருட்பதிவேடும் ஓடீஎஸ் இனால் ஏஎச்ஈஏடீ நிதியத்தின் கீழ் கொள்வனவு செய்யப்பட்ட சகல சொத்துக்களுக்காகவும் பேணப்பட்டுள்ளன. | சுற்றறிக்கையின் படியான அறிவுறுத்தல்கள் இணங்கப்பட வேண்டும். |

**4. பௌதீகச் செயலாற்றல்**

**4.1 செயற்திட்ட நடவடிக்கைகளின் பௌதீக மற்றும் நிதி முன்னேற்றம்**

உயர் கல்வி விரிவாக்கம் மற்றும் மேம்பாட்டு செயற்பாட்டுத் திட்டத்தின் செயற்பாடுகள் 2 கூறுகளாக குறிப்பாக அசயற்திட்டக் கூறு மற்றும் நிகழ்ச்சித்திட்ட கூறாகவும் செயற்படுகின்றது. நிகழ்ச்சித்திட்டக் கூறுகள் 3 விளைவு பகுதிகளின் கீழும் 6 விநியோக இணைப்புக் குறிகாட்களின் கீழ் நடாத்தப்படுகின்றன. விபரங்கள் பின்வருமாறாகும்.
நிகழ்ச்சித்திட்டக் கூறுகள்
**விளைவுப் பகுதி 1** பொருளாதார அபிவிருத்திக்காக முன்னுரிமைத் துறைகளில் உயர் கல்வியில் சேர்க்கையை அதிகரித்தல்.
**விளைவுப் பகுதி 2** உயர் கல்வியின் தரத்தை முன்னேற்றுதல்.
**விளைவுப் பகுதி 3** ஆராய்ச்சி, அபிவிருத்தி மற்றும் கண்டுபிடிப்புகளை மேம்படுத்தல்.
**செயற்திட்டக் கூறு** செயற்பாடுகள் மற்றுமு் கண்காணிப்பு துணைக் குழு

| இல. | கூறு | 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | | தாக்கம் | முகாமைத்துவ கருத்துரைகள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|---|---|---|
| | | எதிர்பார்க்கப்பட்ட பௌதீக செயலாற்றல் | எய்தப்பட்ட செயற்பாடு | | | |
| **(அ)** | **விளைவுப் பகுதி 1** | | | | | |
| **(i)** | டீஎல்ஐ 1: உயர் தொழில்நுட்பவியல் கல்வி நிறுவகம் மற்றும் அரச சார்பற்ற உயர் கல்வி நிறுவகங்களில் முன்னுரிமைத் துறைகளான விஞ்ஞானம், தொழில்நுட்பம், பொறியியல் மற்றும் மருத்துவம் சேர்க்கையை அதிகரித்தல். | 2019 கல்வி ஆண்டில் 17,500 புதிய சேர்க்கைகளை விஞ்ஞானம், தொழில்நுட்பம், பொறியியல் மற்றும் மருத்துவத்தில் அதிகரித்தல் | 2019 கல்வி ஆண்டிற்கான அரசாங்க பல்கலைக்கழகங்களின்சேர்க்கைத் தரவுகள் நாளதுவரையாக்கப்பட்டிருக்கவில்லை. | நலனாளிகளுக்கு எதிர்பார்க்கப்பட்ட நலன்கள் எய்தப்பட இயலாது | பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவில் தரவுகள் இன்னமும் கிடைக்கப்பெறவில்லை. இதனை நாளதுவரையாக்குமளவில் செயற்திட்டங்களுக்கு | தேவையான தகவல்களைப் பெற்றுக்கொள்வதற்கு ஓர் முறைமை அறிமுகப்படுத்தப்பட வேண்டும். |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | | | | இயலாதுள்ளது. | |
| (ii) | டீஎல்ஜ 5 | பீஎச்டீ மற்றும் முதுமாணிப் பட்டப்படிப்புகள் மற்றும் தொழில்சார் முனைவர் பட்டங்களைப் பூர்த்திசெய்யும் பல்கலைக்கழகங்கள். அரச சார்பற்ற உயர் கல்வி நிறுவகங்கள் மற்றும் இலங்கை உயர் தொழில்நுட்ப கல்வி நிறுவக கல்விசார் உத்தியோகத்தர்கள். | 200 புலமைப் பரிசில்களுக்கு இலக்கிடப்பட்டிருந்த போதிலும் 2019.12.31 இல் உள்ளவாறு 112 மானியதாரர்களுக்கு மாத்திரமே வழங்கப்படக் கூடியதாக இருந்தது. | செயற்திட்ட இலக்குகள் எய்தப்படுவதில் சந்தேகம் காணப்பட்டதுடன் செயற்திட்டத்தின் விளைவுகள் நலனாளிகளைச் சென்றடைய இயலாது போகும். | செயற்திட்டம் 2020 யூன் 30 இல் உள்ளவாறு 181 புலமைப் பரிசில்களை வழங்கியிருந்ததுடன் இவ் ஆண்டின் போது இலக்கை எய்துவதற்கு எதிர்பார்க்கின்றது. | சேயற்திட்டம் திட்டமிடப்பட்ட காலப்பகுதியின் போது துணைச் செயற்பாடுகளைப் பூர்த்தி செய்ய வேண்டியதுடன் ஒதுக்கப்பட்ட நிதியை முற்றாகப் பயன்படுத்த வேண்டும். |

**4.2 கொள்வனவு முகாமைத்துவும்**

| கணக்காய்வு அவதானிப்புகள் | தாக்கம் | முகாமைத்துவ கருத்துரைகள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|
| மீளாய்வாண்டின் போது உசாத்துணை நடவடிக்கைகள் மீதான ரூபா 29.5 மில்லியன் தொகையான 5 ஒப்பந்தங்களைள செயற்திட்டம் இரத்துச் செய்திருந்தது. | செயற்திட்டத்தின் எதிர்பார்க்கப்பட்ட விளைவுகளையும் பயனையும் தாக்கும். | ஆரம்ப செயற்திட்டத்தின் திட்டத் தயாரிப்புக் கட்டத்தில் இவ் உசாத்துணைகள் செயற்திட்டத்தின் திட்டத்தில் குறித்த உத்தியோகத்தர்களின் வேண்டுகோளின் படி உள்ளடக்கப்பட்டிருந்தன. எனினும், பின்னர் தேவையில்லை என இனங்காணப்பட்டு உலக வங்கியின் அங்கீகாரத்தில் இரத்துச்செய்யப்பட்டது. | செயற்திட்ட நடவடிக்கைகள் ஆக்கபூர்வமாக திட்டமிடப்பட்டு வடிவமைக்கப்பட்டுள்ளது. |

### 4.3 கள ஆய்வின் போது மேற்கொள்ளப்பட்ட அவதானிப்புகள்

| இல. | கணக்காய்வுப் பிரச்சனைகள் | தாக்கம் | முகாமைத்துவ கருத்துரைகள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
| --- | --- | --- | --- | --- |
| (அ) | • மீளாய்வாண்டின் போது களனி பல்கலைக்கழகத்தின் மருத்துவ பீடத்தினால் ரூபா 1 மில்லியன் பெறுமதியில் கொள்வனவு செய்யப்பட்ட யூனிவேர்சல் ஒகுயூபன்சி தெரபி மேசையும் ஒலி முறைமைகளும் விஞ்ஞான பீடத்தினால் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 14.3 மில்லியன் பெறுமதியான உபகரணங்களும் 2020 பெப்ரவரி 25 ஆம் திகதி வரையிலும் பயன்படுத்தப்படாதிருந்தன.<br>• கொழும்பு பல்கலைக்கழகத்தின் கணனிக் கல்லூரியில் ரூபா 20 மில்லியன் பெறுமதியில் கொள்வனவு செய்யப்பட்ட 90 மடிக்கணனிகளும் 05 லொக்கர்களும் குறித்த நோக்கத்திற்காக ஒரு ஆண்டிற்கும் மேலாகப் பயன்படுத்தப்படாதிருந்தன. | குறித்த நோக்கத்திற்காக உபகரணங்களைப் பயன்படுத்துவதற்கு பட்டதாரி மாணவர்களால் இயலாது போயிற்று. | இப் பொருட்கள் பயன்பாட்டிற்காக எடுக்கப்பட்டுள்ளன. கூறு 1 இன் கீழ் கணக்காய்வு அறிக்கைப் பதிலாக இதற்கு விளக்கமளிக்கப்பட்டுள்ளது. | செயற்திட்ட நிதியத்தின் கீழ் கொள்வனவு செய்யப்பட்ட பொருட்கள் மற்றும் உபகரணங்களின் பயன்பாட்டு வினைத்திறன் மற்றும் விளைவுத் திறன் உறுதிப்படுத்தப்பட வேண்டும். |
| (ஆ) | களனி பல்கலைக்கழகத்தின் விஞ்ஞான பீடத்தின் 2020 பெப்ரவரி 25 ஆம் திகதி கணக்காய்வுத் திகதி அன்றும் எஹெட் செயற்திட்ட மானியத்தின் கீழ் கொள்வனவு செய்யப்பட்டமையை இனங்காணும் வகையில் குறியீடுகள் எதுவும் ரூபா 14.3 மில்லியன் பெறுமதியான பொருட்களில் இடப்பட்டிருக்கவில்லை. | பொருட்கள் இனங்காணப்பட முடியாததுடன் இவை காணாமற் போகவோ அல்லது தவறாகப் பயன்படுத்தப்படவே ா முடியும். | எதிர்வரும் காலங்களில் பொருட்களின் தொடர்பு எண் இடப்பட்டு ஏஹெட் இனால் வழங்கப்படும் ஸ்டிகரும் ஒவ்வொரு பொருளிலும் ஒட்டப்படும். | செயற்திட்ட நிதியத்தின் கீழ் கொள்வனவு செய்யப்பட்ட ஒவ்வொரு பொருளிலும் பொருளுக்கான தொடர்பு எண் பதிக்கப்பட வேண்டும். |

### 4.4 குறைவாகப் பயன்படுத்தப்பட்ட மூலவளங்கள்

| இல. | கணக்காய்வுப் பிரச்சனைகள் | தாக்கம் | முகாமைத்துவ கருத்துரைகள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|---|
| (அ) | இச் செயற்திட்டம் 13 தேசிய பல்கலைக்கழகங்களில் வணிக இணைப்புக் கலங்களை நிறுவுவதற்கு நடவடிக்கை எடுத்ததுடன் 2019 ஆம் ஆண்டின் போது ரூபா 32.8 மில்லியன் தொகையை முற்பணமாக வழங்கியிருந்தது. இருப்பினும், இதில் 70 % இனைப் பிரதிநிதித்துவம் செய்யும் ரூபா 22.9 மில்லியன் மாத்திரமே செலவிடப்பட்டிருந்தது. | செயற்திட்ட நிதி முகாமைத்துவத்தின் மீது நலிவான கட்டுப்பாடுகள் காணப்பட்டதுடன் இது செயற்திட்டத்தின் எதிர்பார்க்கப்பட்ட விளைவுகளிற்குத் தாக்கமளிக்கும். | 2019 ஆம் ஆண்டே பல்கலைக்கழகங்களில் வணிக இணைப்புக் கலங்கள் அமுலாக்கப்பட்ட முதல் ஆண்டாகும். நிதியத்தின் 70% இற்கும் மேலான பயன்பாடு சிறந்த முன்னேற்றமாகும். சகல பல்கலைக்கழகங்களில் வணிக இணைப்புக் கலங்களும் எஹெட் பல்கலைக்கழகங்களில் வணிக இணைப்புக் கலங்கள் மதிப்பெண் அட்டையில் 2 ஆம் கட்டத்தைப் பூர்த்தி செய்திருந்தன. | பல்கலைக்கழகங்களால் அமுலாக்கப்படும் நடவடிக்கைகள் குறித்து கிட்டிய கண்காணிப்பு அவசியமாகும் |
| (ஆ) | வணிக இணைப்புக் கலங்களுக்கு வழங்கப்பட்ட ரூபா 1 மில்லியன் தொகையான முற்பணங்களில் 21.3% மாத்திரமே களனிப் பல்கலைக்கழகங்களால் செலவிடப்பட்டிருந்தன. | செயற்திட்ட நிதி முகாமைத்துவக் கட்டுப்பாட்டில் நலிவுகள் காணப்பட்டதுடன் இது செயற்திட்டத்தின் எதிர்பார்க்கப்பட்ட விளைவுகளைப் பாதிக்கக்கூடும். | யூபீஎல் ஆகஸ்ட் 2019 இல் நிறுவப்பட்டதுடன் செப்தெம்பர் மாதமே ரூபா 1 மில்லியன் முற்பணமாக வழங்கப்பட்டிருந்தது. தாமதமாகி ஆரம்பிக்கப்பட்டமையால் முன்னேற்றம் நலிவாக உள்ளது. | மேலும் தாமதத்திற்கு அனுமதிக்காது பல்கலைக்கழகங்களால் செயற்படுத்தப்படும் நடவடிக்கைகள் குறித்து நெருக்கமான கண்காணிப்பு அவசியமாகும். |
| (இ) | 2019 ஆம் ஆண்டின் போது ரஜரட்ட பல்கலைக்கழகத்தின் வணிக இணைப்புக் கலங்களுக்கு முற்பணமாக ரூபா 4.2 மில்லியன் தொகை வழங்கப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டின் இறுதி வரையில் குறித்த நோக்கத்திற்காக 27.49% ஆன ரூபா 1.1 மில்லியன் மாத்திரமே பல்கலைக்கழகத்தால் செலவிடப்பட்டிருந்தன. | செயற்திட்ட நிதி முகாமைத்துவக் கட்டுப்பாட்டில் நலிவுகள் காணப்பட்டதுடன் இது செயற்திட்டத்தின் எதிர்பார்க்கப்பட்ட விளைவுகளைப் பாதிக்கக்கூடும். | ரூபா 4.2 மில்லியனில் ரூபா 2.5 மில்லியன் 2019 நவம்பர் டிசெம்பர் மாதங்களிலேயே விடுவிக்கப்பட்டிருந்தன. கலங்கள் முற்றாகச் செயற்பட்டதும் முன்னேற்றம் விருத்தியடையும். | மேலும் தாமதத்திற்கு அனுமதிக்காது பல்கலைக்கழகங்களால் செயற்படுத்தப்படும் நடவடிக்கைகள் குறித்து நெருக்கமான கண்காணிப்பு அவசியமாகும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஈ) | பேராதனைப் பல்கலைக்கழகத்தின் ஆர்ஜசீ இற்கு 2019 ஆம் ஆண்டின் போது ரூபா 32 மில்லியன் தொகையான மானியத்தை வழங்குவதற்கு செயற்திட்டம் நடவடிக்கை எடுத்திருந்தது. மீளாய்வாண்டின் இறுதியில் பல்கலைக்கழகத்தால் குறித்த நோக்கத்திற்காக 45% இனைப் பிரதிநிதித்துவம் செய்யும் ரூபா 14.3 மில்லியன் தொகை மாத்திரமே செலவிடப்பட்டிருந்தது. | செயற்திட்ட நிதி முகாமைத்துவக் கட்டுப்பாட்டில் நலிவுகள் காணப்பட்டதுடன் இது செயற்திட்டத்தின் எதிர்பார்க்கப்பட்ட விளைவுகளைப் பாதிக்கக்கூடும்.. | இது குறித்து கணக்காய்வு அறிக்கைக்குப் பதிலளிக்கையில் விளக்கமளிக்கப்பட்டுள்ளது. விளக்கமளிக்கப்பட்டவாறு ரூபா 14.3 மில்லியன் தொகை தேறிய முற்பணத் தொகையான ரூபா 17.57 மில்லியனுடனேயே ஒப்பிடப்பட வேண்டும். அவ்வாறெனில் ஆர்ஜசீ பயன்பாடு 81% ஆகும். | மேலும் தாமதத்திற்கு அனுமதிக்காது பல்கலைக்கழகங்களால் செயற்படுத்தப்படும் நடவடிக்கைகள் குறித்து நெருக்கமான கண்காணிப்பு அவசியமாகும். |
| (உ) | ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் ஐசரீ நிகழ்ச்சித்திட்டத்திற்கு 2019 ஆம் ஆண்டின் போது ரூபா 21 மில்லியன் தொகையான மானியத்தை வழங்குவதற்கு செயற்திட்டம் நடவடிக்கை எடுத்திருந்தது. மீளாய்வாண்டின் இறுதியில் பல்கலைக்கழகத்தால் குறித்த நோக்கத்திற்காக 49.6% இனைப் பிரதிநிதித்துவம் செய்யும் ரூபா 10.4 மில்லியன் தொகை மாத்திரமே செலவிடப்பட்டிருந்தது. | செயற்திட்ட நிதி முகாமைத்துவக் கட்டுப்பாட்டில் நலிவுகள் காணப்பட்டதுடன் இது செயற்திட்டத்தின் எதிர்பார்க்கப்பட்ட விளைவுகளைப் பாதிக்கக்கூடும். | கொள்வனவு நடைமுறைகளை விரைவுபடுத்துவதற்காக செயற்திட்டத்தின் ஆரம்பத்தில் முற்பணம் விடுவிக்கப்பட்டிருந்தது. இருப்பினும், செயற்திட்டத்தின் ஆரம்ப கட்டத்தில் முன்னேற்றம் ஒப்பீட்டு ரீதியில் நலிவாகவே காணப்பட்டது. | மேலும் தாமதத்திற்கு அனுமதிக்காது பல்கலைக்கழகங்களால் செயற்படுத்தப்படும் நடவடிக்கைகள் குறித்து நெருக்கமான கண்காணிப்பு அவசியமாகும். |
| (ஊ) | ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தினதும் பேராதனைப் பல்கலைக்கழகத்தினதும் டீஓஆர் நிகழ்ச்சித்திட்டங்களிற்கு 2019 ஆம் ஆண்டின் போது ரூபா 7.5 மில்லியன் தொகையும் | செயற்திட்ட நிதி முகாமைத்துவக் கட்டுப்பாட்டில் நலிவுகள் காணப்பட்டதுடன் இது செயற்திட்டத்தின் எதிர்பார்க்கப்பட்ட விளைவுகளைப் | ரூபா 7.5 மில்லியன் தொகையில் ரூபா .4. .5 மில்லியன் 2019 திசெம்பர் 30 ஆம் திகதியே விடுவிக்கப்பட்டிருந்தது. ஆகவே, .3 மில்லியன் தொகையான மீதியுடனேயே ஒப்பீடு செய்யப்பட வேண்டும். ஆவ்வாறெனில் | மேலும் தாமதத்திற்கு அனுமதிக்காது பல்கலைக்கழகங்களால் செயற்படுத்தப்படும் நடவடிக்கைகள் குறித்து நெருக்கமான கண்காணிப்பு அவசியமாகும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | ரூபா 9.2 மில்லியன் தொகையுமான மானியத்தை வழங்குவதற்கு செயற்திட்டம் நடவடிக்கை எடுத்திருந்தது. எவ்வாறெனினும், மீளாய்வாண்டின் இறுதியில் குறித்த நோக்கத்திற்காக 42.7% இனையும் 44.5% ஐயும் பிரதிநிதித்துவம் செய்யும் ரூபா 3.2 மில்லியன் தொகையும் ரூபா 4 மில்லியன் தொகையும் மாத்திரமே செலவிடப்பட்டிருந்தது. | பாதிக்கக்கூடும். | முன்னேற்றம் ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தில் 100% ஆகும். டீஓஆர் இன் இரண்டு சுற்று நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் மொத்தமாக விடுவிக்கப்பட்ட முற்பணம் ரூபா 17.27 மில்லியன் ஆனதுடன் இது பேராதனைப் பல்கலைக்கழகத்தின் நிதி முன்னேற்றத்தின் 89% ஆகும். | |
| (எ) | மொறட்டுவைப் பல்கலைக்கழகத்தின் டீஓஆர் நிகழ்ச்சித்திட்டங்களிற்கு 2019 ஆம் ஆண்டின் போது ரூபா 6.5 மில்லியன் தொகை மானியமாக வழங்குவதற்கு செயற்திட்டம் நடவடிக்கை எடுத்திருந்தது. எவ்வாறெனினும், மீளாய்வாண்டின் இறுதியில் குறித்த நோக்கத்திற்காக 16% இனைப் பிரதிநிதித்துவம் செய்யும் ரூபா 1 மில்லியன் தொகை மாத்திரமே செலவிடப்பட்டிருந்தது. | செயற்திட்ட நிதி முகாமைத்துவக் கட்டுப்பாட்டில் நலிவுகள் காணப்பட்டதுடன் இது செயற்திட்டத்தின் எதிர்பார்க்கப்பட்ட விளைவுகளைப் பாதிக்கக்கூடும். | டீஓஆர் இன் இரண்டு சுற்று நிகழ்ச்சித்திட்டங்களை பல்கலைக்கழகம் கொண்டிருந்ததுடன் மொத்தமாக விடுவிக்கப்பட்ட முற்பணம் ரூபா 9.50 மில்லியன் ஆனதுடன் ரூபா 8.71 மில்லியன் தொகை மாத்திரமே விடுவிக்கப்பட்டிருந்தது. இது நிதி முன்னேற்றத்தின் 91% ஆகும். | மேலும் தாமதத்திற்கு அனுமதிக்காது பல்கலைக்கழகங்களால் செயற்படுத்தப்படும் நடவடிக்கைகள் குறித்து நெருக்கமான கண்காணிப்பு அவசியமாகும். |
| (ஏ) | களனி பல்கலைக்கழகம் மற்றும் பேராதனைப் பல்கலைக்கழகத்தின் (திணைக்கள) நிகழ்ச்சித்திட்டங்களான ஈஎல்ரீஏ.்.ஈஎல்எஸ்ஈ இற்கு 2019 ஆம் ஆண்டின் போது ரூபா 1.5 மில்லியன் தொகையையும் ரூபா 3.75 மில்லியன் தொகையையும் மானியமாக | செயற்திட்ட நிதி முகாமைத்துவக் கட்டுப்பாட்டில் நலிவுகள் காணப்பட்டதுடன் இது செயற்திட்டத்தின் எதிர்பார்க்கப்பட்ட விளைவுகளைப் பாதிக்கக்கூடும். | 2019 நவம்பர் மற்றும் டிசெம்பர் மாதங்களிலேயே முற்பணம் விடுவிக்கப்பட்டிருந்தமையால் 2019 இன் இறுதியில் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான காலம் போதாது. | மேலும் தாமதத்திற்கு அனுமதிக்காது பல்கலைக்கழகங்களால் செயற்படுத்தப்படும் நடவடிக்கைகள் குறித்து நெருக்கமான கண்காணிப்பு அவசியமாகும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | வழங்குவதற்கு செயற்திட்டம் நடவடிக்கை எடுத்திருந்தது. எவ்வாறெனினும், மீளாய்வாண்டின் இறுதியில் குறித்த நோக்கத்திற்காக ரூபா 0.1 மில்லியன் தொகையைப் பிரதிநிதித்துவம் செய்யும் 8.19மூ மும் ரூபா 0.36 இனைப் பிரதிநிதித்துவம் செய்யும் 9.7 மூ மும் மாத்திரமே செலவிடப்பட்டிருந்தது. | | | |
| | செயற்திட்டத்திற்கு வழங்கப்பட்ட ரூபா 1 மில்லியன் தொகை மற்றும் கிழக்கு மற்றும் ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகத்தின் (திணைக்கள) நிகழ்ச்சித்திட்டங்களான ஈஎல்ரீஏ.ஃஈஎல்எஸ்ஈ இற்கு 2019 ஆம் ஆண்டின் போது ரூபா 2 மில்லியன் தொகையையும் ரூபா 0.3 மில்லியன் தொகையையும் மானியமாக வழங்கப்பட்டிருந்தது. எவ்வாறெனினும், மீளாய்வாண்டின் இறுதியில் குறித்த நோக்கத்திற்காக ரூபா 0.1 மில்லியன் தொகையும் 0.2 மில்லியன் தொகையும் பிரதிநிதித்துவம் செய்யும் 27.75மூ மும் 42.52 மூ மும் மாத்திரமே செலவிடப்பட்டிருந்தது. | செயற்திட்ட நிதி முகாமைத்துவக் கட்டுப்பாட்டில் நலிவுகள் காணப்பட்டதுடன் இது செயற்திட்டத்தின் எதிர்பார்க்கப்பட்ட விளைவுகளைப் பாதிக்கக்கூடும். | 2019 ஒக்டோபர் மற்றும் டிசெம்பர் மாதங்களிலேயே முற்பணம் விடுவிக்கப்பட்டிருந்தமையால் 2019 இன் இறுதியில் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான காலம் போதாது. | மேலும் தாமதத்திற்கு அனுமதிக்காது பல்கலைக்கழகங்களால் செயற்படுத்தப்படும் நடவடிக்கைகள் குறித்து நெருக்கமான கண்காணிப்பு அவசியமாகும். |
| (ஒ) | செயற்திட்டத்தினால் ரூபா 4 மில்லியன் தொகை கொழும்பு பல்கலைக்கழகத்தின் (பீடம்) நிகழ்ச்சித்திட்டங்களான ஈஎல்ரீஏ/ஈஎல்எஸ்ஈ இற்கு 2019 ஆம் ஆண்டின் | செயற்திட்ட நிதி முகாமைத்துவக் கட்டுப்பாட்டில் நலிவுகள் காணப்பட்டதுடன் இது செயற்திட்டத்தின் எதிர்பார்க்கப்பட்ட | 2019 டிசெம்பர் 24 ஆம் திகதியே முற்பணம் விடுவிக்கப்பட்டிருந்தமையால் 2019 இன் இறுதியில் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான காலம் போதாது. | மேலும் தாமதத்திற்கு அனுமதிக்காது பல்கலைக்கழகங்களால் செயற்படுத்தப்படும் நடவடிக்கைகள் குறித்து நெருக்கமான கண்காணிப்பு அவசியமாகும். |

| | |
|---|---|
| போது மானியமாக வழங்கப்பட்டிருந்தது. எவ்வாறெனினும், மீளாய்வாண்டின் இறுதியில் குறித்த நோக்கத்திற்காக ரூபா 0.5 மில்லியன் தொகையைப் பிரதிநிதித்துவம் செய்யும் 11.51% மாத்திரமே செலவிடப்பட்டிருந்தது. | விளைவுகளைப் பாதிக்கக்கூடும். |

**4.5 மனித வள முகாமைத்துவத்துடன் தொடர்புடைய பிரச்சனைகள்**

| இல. | புதவியணி நிலை | பதவிகளின் எண்ணிக்கை | | | தாக்கம் | முகாமைத்துவ கருத்துரைகள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|---|---|---|---|
| | | அங்கீகரிக்கப்பட்டது | 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு உள்ளபடியானது | வெற்றிடம் மற்றும் மிகையான எண்ணிக்கை | | | |
| (அ) | செயற்திட்ட அலுவலகர் ஆட்சேர்ப்பு மற்றும் முறைமை உறுதிப்படுத்தல் | 01 | - | 01 | செயற்திட்டச் செயற்பாடு பாதிப்படையலாம் | செயற்திட்ட உத்தியோகத்தரின் பங்கானது பல்கலைக்கழகங்களில் இருந்து சேர்ப்பனவுத் தரவுகளைச் சேகரிப்பதுடன் அத்தகைய தரவு கிடைப்பதற்காக நிதியீட்டல் நிறுவகத்தின் தேவையைப் பூர்த்தி செய்வதற்காக திட்டமிடற் கட்டத்திலேயே இப் பதவி உருவாக்கப்பட்டது. இருப்பினும், தேவையான சேர்ப்பனவுப் புள்ளிவிபரங்கள் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவில் இருந்து நேரடியாகச் சேகரிக்கப்பட்டு ஏஹெட் செயற்திட்டத்திற்குக் கிடைக்கப்பெற்றிருந்தது. ஆகையால் இவ் உத்தியோகத்தரின் ஆட்சேர்ப்பு தேவைப்படும் வேளையில் இவ் உத்தியோகத்தரை நியமிப்பது தேவையற்றிருந்தது. | செயற்திட்டத்தின் சுமூகமான செயற்பாட்டை உறுதிப்படுத்துவதற்காக வெற்றிடமான பதவிகள் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியின் படி நிரப்பப்பட வேண்டும். |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| (ஆ) | செயற்திட்டச் செயலாளர் | 01 | - | 01 | வெற்றிடம் நிரப்பப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படாமையால் செயற்திட்டத்தின் செயற்பாடு பாதிப்படையலாம் | ஆட்சேர்க்கப்பட்ட செயலாளர் 2019 யூன் 24 ஆம் திகதி பதவி விலகியுள்ளார். ஆரம்ப நிலையில் இப் பதவி ஓர் கணிசமான பங்கை வகிக்க வேண்டும். எனினும், செயற்திட்ட நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டதும் செயற்திட்டப் பணிப்பாளரான பகுதி நேர மற்றும் முன்னாள் அலுவலகரான பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் உதவித் தலைவரே பெரும்பாலும் சிரேஷ்ட நிர்வாக உத்தியோகத்தருடன் தொடர்பினை ஏற்படுத்திக்கொள்வார். ஆகவே, செயற்திட்டச் செயலாளரின் பதவி விலகல் பாரிய வெற்றிடத்தை ஏற்படுத்தியிருக்கவில்லை. தேவைப்பாடு ஏற்படுகையில் இப் பதவி செயற்திட்டத்தால் நிரப்பப்படும். | செயற்திட்டத்தின் சுமுகமான செயற்பாட்டை உறுதிப்படுத்துவதற்காக வெற்றிடமான பதவிகள் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியின் படி நிரப்பப்பட வேண்டும். |
| (இ) | கொள்வனவு உத்தியோகத்தர் | **01** | - | **01** | வெற்றிடம் நிரப்பப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படாமையால் செயற்திட்டத்தின் செயற்பாடு பாதிப்படையலாம் | ஆட்சேர்க்கப்பட்ட கொள்வனவு உத்தியோகத்தர் 2019 ஒக்டோபர் 24 ஆம் திகதி பதவி விலகியுள்ளார். இப் பதவிக்கு 2019 செப்தெம்பர் இல் விளம்பரம் வெளியிடப்பட்டு விண்ணப்பங்கள் கிடைக்கப்பெற்றன. எவ்வாறெனினும், தேர்தல்கள் ஆணைக்குழுவின் அறிவுறுத்தல்களுக்கு அமைவாக நியமனங்கள் நிறுத்தப்பட வேண்டியதாக 2019 நவம்பர் 20 ஆம் திகதிய டீஎம்எஸ் /பொலிசி/ரெக்ரூட்மன்ட் மற்றும் 2019 செப்தெம்பர் | செயற்திட்டத்தின் சுமுகமான செயற்பாட்டை உறுதிப்படுத்துவதற்காக வெற்றிடமான பதவிகள் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியின் படி நிரப்பப்பட வேண்டும். |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | 18 ஆம் திகதிய ஈசீ/ஈடீஆர்/பீஆர்ஈ- 2019 ஆம் இலக்க சுற்றறிக்கைகளின் பிரகாரம் ஆட்சேர்ப்புகளை முன்னெடுத்துச் செல்ல முடியாதிருந்தது. 2019 திசெம்பர் 23 ஆம் திகதி அமைச்சால் திறைசேரியின் டீஎம்எஸ் இடமிருந்து விசேட அங்கீகாரத்தை வெற்றிடத்தை எம்மால் நிரப்புவதற்காக அமைச்சு கோரியிருந்தது. இதற்கான அங்கீகாரம் 2020 பெப்ரவரி 25 ஆம் திகதியே கிடைக்கப்பெற்றிருந்தது. நேர்முகப் பரீட்சைகள் நடாத்தப்பட்ட போதிலும் ஏற்ற ஒருவரைத் தேர்ந்தெடுக்க முடியாது போயிற்று. மீள விளம்பரப்படுத்துவதற்காக டீஎம்எஸ் இடமும் தேர்தல்கள் ஆணைக்குழுவினதும் அங்கீகாரம் கோரப்பட்டுள்ளது. | |
| (ஈ) | முகாமைத்துவ உதவியாளர்கள் | 08 | 02 | 06 | வெற்றிடம் நிரப்பப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படாமையால் செயற்திட்டத்தின் செயற்பாடு பாதிப்படையலாம். | முகாமைத்துவ உதவியாளர்களை ஆட்சேர்ப்பதற்கு 2018 யூலை மாதம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. 2018 செப்தெம்பர் மாதம் நேர்முகப் பரீட்சைகள் நடாத்தப்பட்டு 6 பேர் தேர்ந்தெடுக்கப்பட்டிருந்தனர், எவ்வாறெனினும் 4 பேர் மாத்திரமே சேர்ந்து 2 பேர் பின்னர் பதவி விலகியிருந்தனர். இதனை அடுத்து, 2019 செப்தெம்பர் 18 ஆம் திகதிய ஈசீ/ஈடீஆர்/பீஆர்ஈ- 2019 ஆம் இலக்க சுற்றறிக்கை மற்றும் 2019 நவம்பர் 20 ஆம் திகதிய டீஎம்எஸ் | செயற்திட்டத்தின் சுமூகமான செயற்பாட்டை உறுதிப்படுத்துவதற்காக வெற்றிடமான பதவிகள் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியின் படி நிரப்பப்பட வேண்டும். |

/பொலிசி/ரெக்ரூட்மன்ட் சுற்றறிக்கையின் பிரகாரம் சகல ஆட்சேர்ப்புகளும் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டிருந்தன. முன்னெடுத்துச் செல்ல முடியாதிருந்தது. இத் தடை நீக்கப்பட்டதை அடுத்து நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

### 4.6 முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

| இல. | கணக்காய்வுப் பிரச்சனைகள் | தாக்கம் | முகாமைத்துவ கருத்துரைகள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|---|
| (அ) | தேவைப்பாடு பகுப்பாய்வு செய்யப்படாது பல்கலைக்கழகங்களுக்கு முற்பணம் வழங்கப்பட்டுள்ளது. | பல்கலைக்கழகங்த்தில் மிகையான நிதி உள்ளதுடன் இது ஏனைய நோக்கங்களுக்காகப் பயன்படுத்தப்படக்கூடும். | கொள்வனவை விரைவு படுத்துவதற்கு செயற்திட்டத்தின் ஆரம்பத்தில் ஓடீஎஸ் இற்கு முற்பணம் விடுவிக்கப்பட்டுள்ளது. | செயற்திட்டத்தின் நடவடிக்கைகள் முறையாக திட்டமிடப்பட வேண்டும். |